RESEARCH ARTICLE

IOR PRESS

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



OPEN ACCESS

# இராஜம் கிருஷ்ணனின் படைப்புக்களில் பெண்ணியச் சிந்தனைகள்

**வே. முத்து கல்பனா [அ, *], ப. சிலம்பரசன் [அ]**

[அ] தமிழ் உயராய்வுத் துறை, எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகம், சென்னை-600096, தமிழ்நாடு, இந்தியா

# Feminist Thoughts in Rajam Krishnan's Literary Works

**V. Muthu Kalpana [a, *], P. Silambarasan [a]**

[a] Department of Tamil, M.G.R University, Chennai- 600 096, Tamilnadu, India

* Corresponding Author:
v.kalpana20499@gmail.com

Received: 09-12-2025
Revised: 22-02-2026
Accepted: 07-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Gender equality is essential in society. Feminism can be understood as the result of the sense of liberation that arose in the minds of women who had lived in subordination for generations. In the works of Rajam Krishnan, there is a clear intention to promote feminist thought by emphasizing equality between men and women without discrimination. In the novel Suzhalil Mithakkum Theepangal, the condition of women's oppressed lives is portrayed in detail. It highlights the sufferings faced by women in marriage, including cruelty inflicted by their own husbands. The novel also discusses issues such as women's lack of education, early marriage, and the overall hardships faced by women. It stresses that women should be respected in society and should live with self-respect and dignity. This study is undertaken to examine the feminist ideas presented in the novel.

**Keywords:** Feminism, Forced Marriage, Self-respect, Education for women

## முன்னுரை

மனிதனின் வாழ்வானது அறம், பொருள், இன்பம் எனும் மூன்று வகையான நிலைகளைக் கொண்டது. அறத்தின் வாயிலாகப் பொருள் சேர்த்து அதன் மூலம் இன்ப வாழ்வை வாழ்வதாகும். குடும்பம், சமுதாயம், அனைத்தின் வளர்ச்சிக்கும் ஆண், பெண், சமத்துவம் இன்றியமையாதது. பெண்கள், தன் அடிமை வாழ்விலிருந்து வெளியே வருவதற்காகத் தாங்களுக்குள் ஏற்பட்ட விடுதலைத் தாக்கமே பெண்ணியம் ஆகும்.

தொடக்க காலத்தில் பெண்ணியம் என்பது கல்வி, வேலைவாய்ப்பு, உரிமைகள், சொத்துரிமை, வாக்களிக்கும் உரிமை, நாடாளுமன்றத்திற்குச் செல்லும் உரிமை போன்றவற்றிற்கான போராட்டமாகக் கருதப்பட்டது. குடும்ப அமைப்பினால் பெண்கள் சுரண்டப்படுதல், தொழிலிலும், சமூகத்திலும், நாட்டின் கலாச்சாரத்திலும் பெண்கள் தொடர்ந்து இரண்டாம் நிலையாகப் பார்க்கப்படுதல் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டங்களை உள்ளடக்கியதாக இன்றைய பெண்ணியம் அமைந்திருக்கின்றது.

தொடக்க காலத்தில் பிரான்சு, அமெரிக்க, இங்கிலாந்து ஆகிய நாடுகளில் மட்டுமே பெண்ணிய இயக்கங்கள் காணப்பட்டன. இன்று உலகளவில் இக்கொள்கை ஆதிக்கம் செலுத்துகிறது. எனவே இது பன்னாடு தழுவிய பொதுமைத் தத்துவம் என்பர்.

பெண்களின் வாழ்க்கை, துன்பத்தில் சிக்கித் தவித்தது. இதிலிருந்து அவர்களை விடுவிக்க உலகமெங்கும் பல எழுத்தாளர்கள் தங்கள் படைப்புக்களின் வாயிலாகக் குரல் கொடுத்துள்ளனர். இராஜம் கிருஷ்ணன் தங்கள் படைப்புக்களில் பெண்ணினம் தன்வாழ்வில் எதிர்கொள்ளும் இன்னல்களை எவ்வாறு பதிவு செய்துள்ளார் என்பதைப் பின்வரும் பகுதி எடுத்துரைக்கின்றது.

## பெண்ணியம்- விளக்கம்

பெண்ணியம் என்பது ஒரு பன்முகத் தத்துவம். பெண்ணியம் பேசுகின்ற பிரச்சனைகளை வெளிப்படுத்துவதற்கு வாழ்க்கை முறைகள், பண்பாட்டுச் சூழல்கள், மொழியாடல்கள், அனைத்தும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. பெண்ணியம் என்பது அறிவுலகம் சார்ந்தவர்களின் பிரச்சனைகள் என்றல்லாம், அடித்தட்டு மத்தியதர வகுப்பினர், உயர்மட்ட வாழ்வினர், எல்லோரையும் பாதிக்கின்றது. பிரச்சனைகளை இனம் காண்கின்ற நோக்கிலும், அதை எடுத்துரைக்கின்ற போக்கிலும், பெண்ணியத்தின் பன்முகம் வெளிப்படுகின்றது. ஃபெமினிசம் (Feminism) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் மொழி பெயர்ப்பே பெண்ணியம் ஆகும். இச்சொல் பெண் எனும் பொருளைத் தரும். இலத்தீன் மொழிச் சொல்லான பெமினா என்பதிலிருந்து உருப்பெற்றது என்பர். இன்று பெண்ணியம் என்ற சொல் சமுதாயத்தின் பார்வையில் ஒரு கோட்பாட்டினைக் குறிக்கும் அடிப்படையில் ஒரு சொல்லாக விளங்குகின்றது.

## குடும்பத்தில் பெண்களின் நிலை

ஆண் வல்லாண்மைச் சமூகத்தால் உருவாக்கப்பட்ட குடும்ப அமைப்பில், பெண்கள் பல்வேறு பிரச்சனைகளை எதிர் கொள்கின்றனர். இதை, ராஜம் கிருஷ்ணன் தனது "சுழலில் மிதக்கும் தீபங்கள்" என்ற புதினத்தில் பெண்ணின் திருமணம், அடிமை வாழ்வு, ஏமாற்றுதல், சுரண்டப்படுதல், சுதந்திரம் என அனைத்துமே இழந்து பெண்கள் வாழ்வதாக இக்கதையை அமைத்துள்ளார். தன் வாழ்வில் சுயமாக முடிவு எடுக்கும் நிலை இல்லாமல், துன்பப்படுகின்றாள். தன் கணவனின் வீட்டில் அடிமையாக வாழ்கின்றாள்.

## பெண்ணின் சமூகத் தகுதி நிலை

பெண்ணின் சமுதாயத் தகுதி நிலை என்று நோக்கும் போது, தாய்வழிச் சமூக அமைப்பில் பெண் தலைமைப் பொறுப்பில் இருந்திருக்கிறாள் என்பதை வரலாறுகள் மெய்ப்பிக்கின்றன. காலப்போக்கில் நிகழ்ந்த சமூக மாற்றங்களால் தோன்றிய தனிச் சொத்துடைமைக் கருத்தாக்கத்தால் தந்தை வழிச்சமூகம் ஏற்பட்டது. அது தனது கருத்தாக்கத்தை நிலை நிறுத்த ஆண், பெண் குறித்த சில கட்டமைப்புக்களை ஏற்படுத்தியது. அதனைக் காலந்தோறும் தக்க வைக்க சில கருத்துருவங்களைக் கைக்கொண்டுள்ளது. இக்கருத்துருவங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட சமூக அமைப்பில் பெண்ணின் தனி மனித தகுதிநிலை என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளது. இதனால் பெண் என்பவள் தனித்துவமாகக் கருதப்படாமல் ஆணைச் சார்ந்து வாழும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளாள். இதன் விளைவாக இன்னும் பெண் பிறப்பு முதல் இறப்பு வரை பல்வேறு இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றாள்.

## இளம் வயது திருமணம்

திருமணம் என்பது பெண்களுக்குப் பாதுகாப்பு என்ற சமூக அமைப்பின் காரணத்தால் பெண் குழந்தைகளின் உடலும் உள்ளமும், தகுந்த வளர்ச்சியினை எட்டாத இளம் பருவத்தில் திருமணம் செய்து வைக்கின்றனர். இதனை பாரதி

"வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுத்த

வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம்"

என்று பாடுகின்றார். இந்நிலையினை "சுழலில் மிதக்கும் தீபங்கள்" என்ற புதினத்தில் பெண்ணின் விருப்பமில்லாமல் கட்டாயத் திருமணம் நடப்பதை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார்.

"ஒன்பதாவதுக்கு மேல் எட்டிப் பார்க்க முடியாத பெண். பதிமூன்று வயசுக்குள் எட்டு முடித்து ஒன்பதுக்கு வந்து என்ன பயன்! குடும்ப மானத்தைக் காப்பாற்ற மல்லிநாதன் என்ற ஒரு பத்தொன்பது

வயசுக் காரனுக்கு அடிமையாக வேண்டி இருந்தது என்று இராஜம்கிருஷ்ணன் தனது எண்ண அலைகளை வெளிப்படுத்தி ஆணாத்திக்க சமுதாயத்திற்கு அறிவுறுத்துகின்றார். "பதினேழு வருஷம் அடிமைச் சேவகம் செய்து குழந்தைகளைப் பெற்று வளர்த்த இவளுக்கு ஒரு பேச்சு, ஒரு குரல் எழுப்ப உரிமை இல்லையா? இது அடக்கு முறை" வசதியான வீடு, நவீனமான வாழ்க்கை, ஆடம்பரங்கள் ஒரு பெண்ணுக்குத் தன் உரிமைக் குரலில் இலேசான ஒலியைக் கூட எழுப்ப விடாத அழுத்தங்களாக இருக்கின்றது என்று வருத்தத்தோடு எண்ணுவதைப் பார்க்க முடிகின்றது.

## கல்வியின் முக்கியத்துவம்

பெண் என்றால் அலட்சியம் என்ற பார்வை இன்றளவும் உள்ளது. பெண்கள் கல்வி கற்று ஆண்களுக்கு நிகராக சமுதாயத்தில் சுய மரியாதையோடு வாழ வேண்டும். இதனால், ஒவ்வொரு பெண்ணிற்கும், கல்வி மிக இன்றியமையாதது ஆகும். இராஜம் கிருஷ்ணனின் "மாறிமாறிப் பின்னும்" என்ற புதினத்தில் படிப்பறிவு இல்லாத, ரேவு என்ற பெண் அடிமைப்பட்டு வாழும் நிலையைக் காணமுடிகிறது. சுதா என்கிற பெண் படித்து சுயமரியாதையுடன் வாழ்வதையும் மறுபக்கம் காண முடிகின்றது. சுதா அறிவுத்திறன் உடையவளாக, சமுதாயத்தில் மரியாதையுடன், கணவரிடத்தில் அன்பான மண வாழ்க்கை வாழ்வது கண்டு, தானும் படிக்க வேண்டும் என்ற எண்ணம் ரேவுக்கு வருவதை, படிப்பின் முக்கியத்துவத்தை அவள் உணர்வதை ஆசிரியர் எடுத்துரைக்கின்றார். மணியன் தூத்துக்குடி கிளம்புகையில் தனது நண்பன் நசரேனைப் பார்த்துவிட்டு வரவேண்டும் என்று எண்ணினாள். நசரேனின் மனைவி, படித்த வசதியான பெண். மணியன், நண்பன் வீட்டிற்கு வந்ததும் அவனது உபசரிப்பும், விருந்தோம்பல், கல்வியறிவும் அவளை மதிப்புடையவளாக ஆக்கியது. இதனை இராஜம் கிருஷ்ணன் "அலைவாய்க் கரையில்" என்ற புதினத்தில் எடுத்துரைக்கின்றார். படித்த பெண்ணிற்கு, மதிப்பும் மரியாதையும் பண்பும் மிகுந்திருக்கும் என்கிறார்.

## முடிவுரை

பெண்கள், சமுதாயத்தில் அடிமைப்பட்டு வாழ்கின்றனர். திருமணமான பெண்களின் உழைப்பு வீட்டில் சுரண்டப்படுவதைப் போல, அவர்கள் பணிபுரியும் இடங்களிலும் சுரண்டப்படுகின்றது. பெண்களுக்குக் கல்வி முக்கியம் என்பதையும், கல்வியறிவு இருந்தால் பெண்கள் தங்கள் அறிவினாலும், தனித் திறமையினாலும் மரியாதையுடனும் வாழ முடியும், தங்கள் வாழ்வில் உழைத்து முன்னேற முடியும் என்ற பெண்ணியச் சிந்தனைகளை இராஜம்கிருஷ்ணன் தன் படைப்புக்களில் எடுத்துரைத்துள்ளார்.

## References

Bharathiar, Bharathiyarin Pen Viduthalai, Uma Pathipagam, Chennai

Rajam Krishnan, Sulalil Mithakkum Deepangal, Thangam Pathipagam, Chennai.

Rajam Krishnan, Mari Mari Pinnum, Thangam Pathipagam, Chennai

Tamil Vaanan, (1974) ManiMegalai Tamil Agarathi, Chennai

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License